கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு - தொழில்நுட்பக் கல்விப் பிரிவு

க.பொ.த. (உயர் தரம்) துணை மதிப்பீடு – 2026

மனைப்பொருளியல் | 28 | T | II | காலம் 3 மணித்தியாலம்

- **மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**
- வினாத்தாளை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும், வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- அறிவுறுத்தல் – **முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு** பதிலளிக்கவும்.

1.

I. ரங்கிரி தம்புளை விகாரையும், சீகிரியாவும் அமைந்துள்ள மாவட்டமும் மாகாணமும் முறையே குறிப்பிடுக.

II. மனைக்கு மின் வழங்கும் போது வழங்கும் நிறுவனத்துக்குரிய துணைக்கூறுகள் **இரண்டின்** பெயர்களைத் தருக.

III. ”முழுப்புரதம்” என்பதனை அறிமுகம் செய்க.

IV. உடலினால் விற்றமின்களும், கனியுப்புக்கதும் அகத்துறிஞ்சப்படுவது குறைவுபடுவதற்கான காரணங்கள் **இரண்டு** தருக.

V. ஆடைத் கைத்தொழிலுடன் இணைந்த கைத்தொழில்கள் **இரண்டு** பெயரிடுக.

VI. மீளபிறப்பித்த நார்கள் இரண்டு தருக.

VII. மில், மொரிசன் ஆகியோரின் கூற்றிகமைய சுற்றுப் பயணக் கவர்ச்சி **இரண்டினைப்** பெயரிடுக.

VIII. “இயற்கை வளங்கள்” அறிமுகம் செய்க.

IX. நிறுவனம் ஒன்றில் நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கான நோக்கங்கள் **இரண்டு** தருக.

X. உள அழுத்தத்தை வெளிக்காட்டும் இயல்புகளில் அறிதலாட்சி சார்ந்த பண்புகள் **இரண்டு** தருக.

(மொத்தப் புள்ளிகள் 2 x 10 = 20)

2.

I. சிறந்த வாழ்க்கைச் சூழல் நிர்மாணிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டக் கூடிய நடவடிக்கைகள் **மூன்று** குறிப்பிடுக. (புள்ளி 3)

II. மழைநீர் சேமிப்பினால் வீட்டுக்குக் கிடைக்கும் நன்மைகள் **மூன்றினை**. சுருக்கமாக குறிப்பிடுக (புள்ளி 3)

III. விளக்குக.

a. ஒருமைப்பாடு

b. ஒன்றிணைப்பு (புள்ளி 4)

IV. பின்வரும் மின் உபகரணங்களின் மின்சக்தி மாற்றத்தைக் குறிப்பிட்டு, அவற்றை எவ்வாறு பராமரிப்பது என்பதை சுருக்கமாக விபரிக்கவும்.

a. சலவை இயந்திரம்

b. சோறு சமைப்பான் (புள்ளி 6)

(மொத்தப் புள்ளிகள் 16)

3.

I. “அல்லூட்டம்” அறிமுகம் செய்க. (புள்ளி 3)

II. உடலுக்கு இரும்புச்சத்து குறைவினால் ஏற்படும் குறைபாட்டு நோய் அறிகுறிகளை **நான்கினை** எடுத்துக்காட்டுக. (புள்ளி 4)

III. பின்வரும் உணவுப் பொருட்களை சமைக்கும் போது, வெப்பமேற்றும் போது அவதானிக்கத்தக்க மாற்றங்களைக் குறிப்பிடுக

- சீனி – (உலர்வெப்பம்)
- இறைச்சி – (ஈரவெப்பம்) (புள்ளி 4)

IV. மந்தபோசணையினால் அவதியுறும் முன்பாடசாலைப் பிள்ளை ஒருவருக்கு, ஒரு நாளுக்கான உணவுப் பட்டியலைத் திட்டமிடுக. (புள்ளி 5)

(மொத்தப் புள்ளிகள் 16)

4.

I. “நீரில் வெளிறச் செய்தல்” (Blanching) அறிமுகம் செய்து, அதன் பயன்கள் **இரண்டினை** எழுதுக. (புள்ளி 3)

II. உணவுப் நற்காப்பின் போது பயன்படுத்தும் ”புகையூட்டல்” என்பதனை விளக்கி, அதன் மூலம் தயாரிக்கும் உணவுப் பொருட்கள் **இரண்டு** தருக. (புள்ளி 3)

III. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய புறவாரியான ஒழுக்கங்கள் **நான்கினை** குறிப்பிடுக. (புள்ளி 4)

IV. சுருக்கமாக எழுதுக.

a. மரக்கறி உலர்த்தும் செயற்பாடு

b. அதிகுளிரூட்டல். (புள்ளி 6)

(மொத்தப் புள்ளிகள் 16)

5.

I. ஆடைக்கான “மாதிரி உரு நிர்மாணித்தல்” என்பதனை சுருக்கமாக விளக்குக? (புள்ளி 3)

II. ஆடைத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைப் படிமுறை ஒழுங்கில் குறிப்பிடுக. (புள்ளி 4)

III. பல்பகுதியங்களை நாராக மாற்றும் செயன்முறையின் கரைசல் முறை நூற்றல் முறையைத் தெளிவுபடுத்துக. (புள்ளி 4)

IV. பாவு விலா நெசவு முறையை வரைந்து சுருக்கமாக விளக்குக. (புள்ளி 4)

(மொத்தப் புள்ளிகள் 16)

6.

I. “வளங்களின் முறையற்ற” பயன்பாடு என்பதை அறிமுகம் செய்க. (புள்ளி 2)

II. இயற்கை வளங்கள் குறைதல் அல்லது அழிதல் காரணமாக ஏற்படத்தக்க பாதகமான விளைவுகள் **நான்கு** பெயரிடுக. (புள்ளி 4)

III. காலநிலை மாற்றங்களினால் இலங்கை மக்களின் வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தும் தாக்கங்கள் **இரண்டினை** பெயரிட்டு அதில் **ஒன்றைச்** சுருக்கமாக விளக்குக. (புள்ளி 4)

IV. சுற்றுலாத் கைத்தொழிலில் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு ஆகியவற்றில் அடங்கும் வெவ்வேறு அம்சங்கள் **நான்கினை** பெயரிட்டு அதில் **இரண்டை** விளக்குக. (புள்ளி 6)

(மொத்தப் புள்ளிகள் 16)

7.

I. கட்டிளமைப்பருவ பிள்ளையின் ஒழுக்கலாறு விருத்தியில் தாக்கம் செலுத்தும் குழுவினர் யார்? (புள்ளி 2)

II. கட்டிளமைப்பருவத்தினர் முகங்கொடுக்கும் கல்வி சார்ந்த பிரச்சினைகளை பட்டியல்படுத்துக. (புள்ளி 4)

III. “கட்டிளமைப் பருவத்தில் நுண்ணறிவு விருத்தி தெள்ளத்தெளிவாக இடம்பெறும் பருவமாகும்” கலந்துரையாடுக. (புள்ளி 4)

IV. கட்டிளமைப்பருவத்தினரின் உளப்பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கு பாடசாலை மட்டத்தில் எடுக்கக்கூடிய கலாச்சார செயற்பாடுகளை கலந்துரையாடுக. (புள்ளி 6)

(மொத்தப் புள்ளி 16)

8. கீழ்வரும் தலைப்புகளில் **நான்கைத்** தெரிவு செய்து சிறுகுறிப்பெழுதுக:

I. கட்டிடம் ஒன்றின் வெளிச்சூழ்நிலை வடிவமைப்பில் பல்வேறு வடிவங்கள் நிர்மாணித்தல்.

II. உடல் திணிவுச் சுட்டி.

III. பசை நீக்கம்.

IV. சுற்றுலாத்துறையின் தங்குமிட வசதிகள்.

V. யௌவனப் பருவத்தினரின் உளத்திற்கு ஆறுதலளிக்கக் கூடிய பயிற்சிகள்.

(மொத்த புள்ளிகள் 4 x 4 = 16)